Registered as a News Paper at the G. P. O. Sri Lanka Under Zo. QB/252/82 விலை 1 ரூபா ஆண்டுச் சந்தா ரூபா 15

# ஐக்கியதீபம்

ஸ்ரீ ல. தே. கூ. சபையில்
(யாழ்ப்பாணம்)
விற்பனையாகின்றன

| | |
|---|---|
| காசுப்புத்தகம் ஐ. நா.சங். | 30-00 |
| அங்கத்தவர் பேரேடு | 19-50 |
| அங்கத்தவர் இடாப்பு | 2-65 |
| கடன் மனுப்பத்திரம் ஐ. நா.ச. | 10 |
| கடன் முறி ஐ. நா. ச. | 10 |
| மத்தியஸ்த மனு | 10 |
| கேள்விப் பத்திரம் | 10 |


மலர் : 38 மாசி 1983 இதழ்: 2

பிரதேச

## கூட்டுறவுக் கல்வி நிலையம்

**பிரதேச கூட்டுறவுக் கல்வி நிலையம் யாழ்ப்பாணத்தில் மே மாதம் பிற்பகுதியில் இயங்கத் தொடங்கும். இதற்கான ஏற்பாடுகள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன.**

யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரி கட்டிடத்தின் ஒரு பகுதியில் மேற்படி கல்லூரி நடைபெறும்.

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபை கூட்டுறவுக் கல்விக்கு அதி முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற நோக்குடன் எடுத்து வரும் முயற்சிகளில் பிரதேச கூட்டுறவுக் கல்வி நிலையங்களும் குறிப்பிடத்தக்கவை.

சங்கங்களின் உயர் மட்ட பணியாளர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் சுவீடன் உதவியோடு பிரதேச கல்விநிலையங்களை நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அதன் விளைவாக அதற்கென ஒரு பகுதியை தேசிய கூட்டுறவுச் [illegible] நிறுவி கல்விப் பணிப்பாளர் ஒருவரையும் அமர்த்தியது.

இந்த அமைப்பின்படி காலி, குருநாகல் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பிரதேச கல்வி நிலையங்களை நிறுவுவதென திட்டமிடப்பட்டது.

அதன்படி காலியிலும் குருநாகலிலும் குறித்த கல்லூரிகள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. அடுத்ததாக யாழ்ப்பாணத்தில் குறித்த கல்லூரி இயங்கப் போகின்றது.



## கூட்டுறவாளர் வீரகத்திப்பிள்ளைக்கு அஞ்சலி

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டக் குழுவின், உறுப்பினராகவும் வேறு பல சமூக சேவை நிறுவனங்களின் உயிர் நாடியாகவும் இருந்து சேவையாற்றிய திரு. க. வீரகத்திப்பிள்ளை அவர்கள் 19-3-83ல் மறைந்தமை வட பகுதி கூட்டுறவு இயக்கத்திற்கும் சமூக சேவை நிறுவனங்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

வாழ்க்கையில் கஷ்டப்படுவோரின் இன்னல் துடைத்திட தனது வாழ்வு நலனையும், உடல் நலனையும் கவனியாது சேவை புரிந்த இனிய பண்பாளர் அவர்.

கூட்டுறவுக் கல்வியை சாதாரண மக்களிடையேயும் நன்கு புகட்டி அவர்களது வாழ்க்கையைக் கூட்டுறவு வாழ்க்கையாக அமைப்பதன் மூலம் அவர்களின் பொருளாதார சமூகப் பிரச்சினைகளுக்கு விடிவுகாணலாம் என்ற நம்பிக்கையோடு அவர் சேவை புரிந்தார்.

சிநோர் நிறுவனத்தின் சமூக அபிவிருத்திப் பணிப்பாளராக நேர்மையோடு அவர் சேவை செய்ததன் மூலம் அந்நிறுவனத்தின் சிநோர் நாட்டு இயக்குநர்களின் பெருமதிப்பை பெற்றிருந்தார்.

அன்னார் ஈழநாடு, வீரகேசரி ஆகிய பத்திரிகைகளின் நிருபராகவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மாகாணச் செய்தி நிருபராகவும் கடமையாற்றி மக்களின் குறைபாடுகளை வெளியுலகிற்குக் கொண்டு வர தனக்கென தனியான ஒரு சிறப்பு இடத்தினை வகித்தார்.

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

## சங்கங்களின் வீழ்ச்சிக்குக் காரணம்

கூட்டுறவுக் கல்வியறிவு இல்லாமையே கூட்டுறவுச் சங்கங்களின் வீழ்ச்சிக்கு காரணம். சிறந்த முகாமைத்துவத்தைப் பெறுவதற்கு கூட்டுறவுக்கல்வி அவசியம்

இவ்வாறு திருகோணமலை ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு. கா. தர்மராசா திருகோணமலை மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களின் கல்விக்குழு, கல்வி உத்தியோகத்தருக்காக நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி சபையின் மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

ப. நோ. கூ. சங்கங்கள் சிறந்த கல்வித்திட்டத்தை அமைத்து அதன் மூலம் பணியாளர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் கூட்டுறவுக் கல்வி அறிவைப் புகட்ட வேண்டும் என தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு ஜி. பி. அபேகீர்த்தி பேசுகையில் கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தியில் கூட்டுறவுச் சங்க நிர்வாகம் கூடிய கவனம் எடுக்க வேண்டும் அப்போதுதான் சகல மக்களின் பங்களிப்பும் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடைக்கும். சிறந்த நிர்வாகத்தையும் செயற்படுத்தலாம் என்றார்.

மாவட்ட செயலாளர் திரு. ஆ. மகேஸ்வரா பேசுகையில் கல்வி வேலைத்திட்டங்களை சங்கங்கள் தயாரிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது அவற்றைச் செயற்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்

மேலும் அவர் பேசுகையில் சங்க நடவடிக்கைகளில் மகளிர் கூடுதலாகப் பங்குபற்றுவதை அதிகரிப்பதன் மூலம் சமுதாய ஒற்றுமையை வளர்ப்பதோடு சங்கத்தையும்வளர்க்கலாம் என்று கூறினர்.

## வடிசாலைச் சமாசம் பதியப்பட்டது

யாழ்மாவட்ட வடிசாலை விற்பனைக் கூட்டுறவுச் சமாசம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சமாசம் வடிசாலையை நிறுவி சாராயத்தை வடிக்கும் தொழிலில் ஈடுபடும்

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள்இதில் அங்கம்வகிப்பார்கள்.7பேர் கொண்ட இதன் நிர்வாகசபையில் 4 பேர் தேரிவு செய்யப்பட்டவர்களாகவும் 3 பேர் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளரால் நியமிக்கப்பட்டவர்களாகவும் இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன் மிக்க இளைஞர்கள் உருவாக்கப்பட வேண்டியுள்ளனர்

வி. செ. சுவாமிநாதன்
திட்டமிடல் அதிகாரி, யாழ்ப்பாணம்

இருக்கின்ற சமுதாயமொன்றில் பிறந்து வாழுகின்ற இளைஞர்களின் தலைவிதியை அவர்கள்வாழும் சமுதாயத்தின் யதார்த்த நிலையோடு சேர்த்துத் தான் ஆராய வேண்டும். உதாரணமாக வளர்முக நாடொன்றில் வாழும் இளைஞர்களின் பிரச்சினை அந்நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக கல்வி, கலாசாரப் பிரச்சினைகளுடன் பின்னிப் பிணைந்தனவாகவே இருக்க முடியும். ஆய்வு நோக்கிற்காக குறிப்பிட்ட பருவத்தை எடுத்து ஆராய்ந்த போதிலும் முழுக்க முழுக்க இளைஞர்மாத்திரம் வாழ்கின்ற நாடு ஒன்றுமில்லை. எனவே பிரச்சினைகளுக்கான தீர்வு குறுகிய வட்டத்துள் அடங்கிவிடக் கூடியதாக இல்லாமல் நாடு தழுவியதாகவும் அதற்குமேலாக உலகம் தழுவியதாகவும் உள்ளது. நாடுகள் பெயரின் அடிப்படையில் வேறுபடுத்தக் கூடியனவாக ஆக்கப்பட்டிருப்பினும், பிரச்சினைகளை அவ்வாறு வரையறுக்க முடியாது. இளைஞரது பிரச்சினைகள் இந்தியாவிலென்றாலும், இலங்கையிலென்றாலும் கென்னியாவிலென்றாலும். மெச்சிக்கோவிலென்றாலும் ஏறத்தாழ ஒரேமாதிரியிலேயே அமைந்துள்ளன.

யாரோ அன்னியருக்கு அடிமையாயிருந்து விடுதலை பெற்ற பலநாடுகளின் சுதந்திரம் அரசியல் எல்லைக்குள் மாத்திரம் அடங்கிக்கிடப்பதைத்தான் காண்கிறோம். இதிற்கூட இராணுவத்தினர் கணிசமான பங்கைக் கபளீகரம் செய்துவிட்டனர். மற்றைய பொருளாதார, சமூக, கலாசார அம்சங்களில் அன்னிய ஆதிக்கத்தின் செல்வாக்கு உருவமாகவோ, அருவமாகவோ செல்வாக்குச் செலுத்துவதை அது அப்படியே ஊறிப்போய்விட்டதைக் காணாமல் இருக்க முடியாது. சோவியத் யூனியன் சீனு போன்ற உள்நோக்கு சுயதங்கியிருத்தல் மாதிரிகள் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்துள்ளதாக அறிய முடிந்துள்ள போதிலும் அங்குள்ள உயர் அதிகார மட்ட அறிக்கைகளை எதற்கெடுத்தாலும் நம்பவேண்டியிருப்பது சுதந்திரமான ஆய்வாளருக்கு கவலைதரும் அம்சமாகும். மாதம் மும்மாரி பொழிகிறதென அறிக்கைகளில் இருந்தாலும் மழைபெய்ததா என மக்களிடம் கேட்டு அறிய முடியாது. நிலைமைகளை சோவியத்யூனியனிலுயம் சீன மக்கள் குடியரசிலும்நேரடியாகப் பார்த்த தலைவர்களும் எழுத்தாளர்களும் லௌகீ நோக்கில் அந்த அமைப்பில் வெற்றிகள் அதிகமென்று கூறுகின்ற அதே நேரத்தில் குரைக்கக் கூடாத சொழுத்த நாய்களைப்பற்றி சுட்டிக்காட்டுவர்.

பிரச்சினைகளும் தீர்வுகளும் பொதுவாக முரண்பாடுள்ளனவாக இருக்கின்றன. பல சமயங்களில் பிரச்சினைகளும் தீர்வுகளும் தூரத்தில் இருக்கின்றன. அவை ஒரு தனி நாட்டின் கட்டுப்பாட்டை மீறியதாகவுள்ளன. பல நாடுகளில் நோய்களுக்கு கொடுக்கப்பட்ட மருந்துகள் நோய்களைத் தீர்ப்பதற்கு பதிலாக நோய்களை மாற்றி வேறு புது நோய்களை ஆக்கிவிட்ட சங்கதிகள் தெரிய வரும். பிரச்சினைகள் சங்கடம் நிறைந்தவைதாம். நாம் ஏற்றி இறக்குகின்ற பொருட்களின் விலைகளை எங்களால் தீர்மானிக்க முடிவதேயில்லை. இருப்பனவெல்லாம்வளர்ந்த உலகத்திற்குபாதகமாகவே அமைந்துள்ளன. வளர்ந்த உலகத்தின் பிரச்சினைகள் பாலுக்கு சீனி போடுவதுபற்றியதாகும் கூழுக்கே உறுப்பில்லாத அபிவிருத்தி அடைந்துவரும் உலகின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுவதாயின் நீதி நிறைந்த புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கமைப்பு ஏற்பட்டேயாக வேண்டுமென்பது பலதடவை வற்புறுத்தப்பட்டுள்ளது பணக்கார நாடுகள் சில, ஏழை நாடுகளின் குரலுக்கு பிரமாதமாகச் செவிமடுக்காததுன்பநிலை அப்படியே தொடர்கிறது. உலகத்தில் எந்தநாடும் தனி உலகமாக ஒதுங்கி அமையமுடியாதென்பது. நிருபணமாகிவிட்டது இருப்பினும் பிரவிய மாற்றமொன்று வரும் வரை தனிநாடுகள் சோம்மாண்டமான உலகந் தழுபியிருக்க முடியாத அளவிற்கு பிரச்சினைகள் கொழுந்துவிட்டெரிகின்றன. இப் பிரச்சினைகள் அரசாங்கத்துக்கும் இருக்கும் சமுதாயத்துக்கும் சவாலாக அமைகின்ற வேளையில் அவற்றைத் தற்காலிகமாகத்தணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதை மறுப்பதற்கில்லை. ஆனல் தேவைப்படுபவை நிரந்தர தீர்வுகள்.

முடிவாகக் கூறுவதானல் பிரச்சினைகள் பலவாகவும் பொதுவாகவும் உள்ளன. குழந்தைகளதும்முதியவர்களதும் பிரச்சினைகளை விட இளைஞர்களோடு தொடர்புபட்ட பிரச்சினைகள் மிகவும் உணர்ச்சிகரமானவை அவற்றைலாவகமாக பொருத்தமானமுறையில் கையாள் வதிலேதான் இளைஞர் சக்தியை அபிவிருத்திக்கு ஆக்கத்துக்கு பயன்படுத்தமுடியும்.

(முற்றும்)

## மகளிர் தனித்துவம் பெறுகின்றனர்

கூட்டுறவு மகளிர் பாவனையாளர் கல்வித் திட்டத்தின் மூலம் கூட்டுறவு மகளிர் தனித்துவம் பெற்று வருகின்றனர்.

இவ்வாறு மன்னர் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. எம். கந்தையா கூட்டுறவு மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்டம் மன்னர் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை மூலம் தாழ்வு பாட்டில் இருநாட்கள் நடாத்திய கருத்தரங்கின் ஆரம்ப வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டு பேசுகையில்குறிப்பிட்டார்.

மன்னர் தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. எஸ். மரியாம்பிள்ளை மேற்படி வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் உப தலைவர் திரு. சி. இராசநாயகம் பாவனையாளர் கல்வித்திட்டப் பணிப்பாளர் செல்வி ஜயந்தா தென்னக்கோன், மன்னர் தேசிய கூட்டுறவுச் சபை மாவட்ட செயலாளர் திரு. பொ. சண்முகசுந்தரம் கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளர் திரு ஞா, கேதீஸ்வரன் பாவனையாளர் கல்வித்திட்ட இணைப் [illegible] லசிங்கம் வணபிதா அருட்திரு. பொன்னையா, மன்னர் மாவட்ட மகளிர் குழுத் தலைவி செல்வி. சி. பாக்கியம், தெல்லிப்பளை ப. நோ, கூ. ச. உபதலைவி திருமதி மாணிக்கவாசகர், மன்னர் மாவட்ட ப.நோ. கூ. சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்கள், மகளிர் குழுத் தலைவிகள் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்,

தலைவர் திரு- எஸ். மரியாம்பிள்ளை தனது தலைமையுரையில் அரசாங்கத்தின் பொருளாதாரக்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

நீட்டோலை கபிலர்

## புதியதோர் வழி

இன்று எமது நாட்டில் தொலைக்காட்சிப் புயல் வீசிக் கொண்டிருக்கின்றது இந்த வீச்சின் நன்மை தீமைகளைப் பற்றி இங்கு நாம் குறிப்பிட விரும்பவில்லை. ஆனல் இத்தகைய ஒரு சூழ்நிலையில் நாம் ஒரு விடயம் குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது.

அதாவது தமிழ்த்திரைப் படத் துறையில் ஒரு சில இளந்தலைமுறையினர் சில புதுமைகளைத்துணிந்து செய்யத்தலைப்பட்டுள்ளனர். நட்சத்திரக் கவர்ச்சி என்ற சுவர் ஓரளவு சாய்ந்து கொண்டு போகிறது

தாராளமாக தமிழ்த் திரைப்படங்கள் இறக்குமதியாகின்றன.

வீதிகள், வீடுகள் தோறும் தொலைக்காட்சி ஆட்சி புரிகின்றன.

திரைப்படங்களை தயாரிப்பதற்கு முன்பைவிட ஏறத்தாழ பத்து மடங்கு செலவு அதிகரித்துள்ளது

இந்நிலையில் இங்கு தமிழ்த்திரைப்படத்தை இனிமேல் தயாரித்து பணவசூலில் இலாபம் அடையாவிட்டாலும் செலவழித்த பணத்தை அப்படத்தைத் திரையிட்டு பெற முடியுமா?

கஷ்டங்களைப்பொருட்படுத்தாது பெருமுயற்சி செய்து தமிழ்ப்படங்களை இங்கு தயாரித்தவர்கள் அதற்கு முழுக்குப் போட்டுவிட்டு பெருமூச்சோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

'தோட்டக்காரி'யோடு தொடங்கிய இலங்கைத் தமிழ்ப்பட வரலாறு ஏறத்தாழ இன்றைக்கு இருபத்து மூன்று வருடங்களைக் கொண்டதாகும்.இக்கால எல்லையில் தயாரிக்கப்பட்ட படங்களில்சிலகலைரீதியாக ஒருசில முன்னேற்றங்களைக் காண முடிந்ததே தவிர சாதாரண வெற்றியைக் கூடக்காண முடியவில்லை.

இந்சூழ்நிலையில் இனியும் தமிழ்ப்படங்களைத் தயாரிக்க எவருக்குமேதுணிவுவராது.அப்படித்துணிந்தாலும் காசை கரியாக்கும் செயலாகவே அது முடியும்.

இந்நிலையிலும் தமிழ்ப் படத்துறையை இங்கு வளர்ச்சியுறச் செய்யவும் மக்கள் அவற்றை விரும்பிப்பார்க்கவும் தூண்ட ஒருவழி எமக்கு இருக்கிறது.

எமது நாட்டுச் சூழலையும் வாழ்க்கையையும் பின்னணியாக வைத்து தனித்துவமான பாணியில் அரை மணித்தியாலம் அல்

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு விழுமியங்களையும் தனிப்பட்ட விழுமியங்களையும்

கூட்டுறவுத் தத்துவத்தினைச் செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு வடிவங்களே கூட்டுறவுச் சங்கங்கள். இத் தத்துவத்தினை நடைமுறைப் படுத்துவதென்ருல் நாம் சொல்வதைச் செயற்படுத்த வேண்டும். தனிப்பட்ட பணியாளரின் விழுமிய அமைப்புடன் ஒன்றிணைப்பதற்கான சூழலையும் வாய்ப்புக்களையும் நாம் உருவாக்கிக் கொடுக்கவேண்டும். தனியார் கற்றலை ஊக்குவிக்கும் சூழலை இது உருவாக்க முடிவதனுல் அமைப்புடன் மேலும் பயன் முளைப்புப் பெறுகின்றது.

கூட்டுறவுக் கோட்பாட்டிற்கு 3 அடிப்படை விழுமியங்கள் உண்டு. சமநீதி, ஒருவருக்கொருவர் உதவி கூட்டுறவு, என்னும் சமூக இயக்கத்தில் ஈடுபட்டுள்ள தனி ஆட்களின் நடத்தையை இவ்விழுமியங்களே நிர்ணயித்தல் வேண்டும். கூட்டு மொத்தமாக இவ்விழுமியங்கள் கூட்டுறவுக் கோட்பாட்டின் ஆன்மா எனலாம்.

இங்கு இனங் காணப்பட்டுள்ள மூன்று விழுமி-

**ஜனனிஷ் கனன்**

யங்களையும் சுட்டிப்பான கூட்டுறவுக் கொள்கைகளுடன் தொடர்பு படுத்தலாம், முதல் இரண்டு அடிப்படைக் கொள்கைகளிலும் சமத்துவம் என்னும் விழுமியத்தினைக் காணலாம். அவையாவன 'திறந்த' தன்விருப்பார்ந்த உறுப்புரிமையும் குடியாட்சிப்பாங்கான கட்டுப்பாடும் இந்த முதல் இரண்டு கூட்டுறவுக் கொள்கைகளிலும் தொக்கி நிற்கும் சமத்துவம் என்னும் விழுமியம், தமது வாழ்வை உருவாக்கும் சக்திகளைக் கட்டுப் படுத்துவதில் எல்லோர்க்கும் சமவாய்ப்பினை அளிக்கின்றது. பாகுபாடான தடைகளின்றி தனியாட்கள் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாக்சேர்ந்து சங்க அலுவல்களில் சமத்துவ அடிப்படையில் ஈடுபடலாம்.

சமநீதி என்ற விழுமியம் பங்குகளில் மட்டுப்

## ஒன்றிணைத்து

படுத்தப்பட்ட வட்டி என்ற கொள்கையிலும், மேலதிகம் உறுப்யினர்களி-

## கற்றலுக்கு உதவுதல்

டையே பகிர்ந்து அளிக்கப்படுகின்றது என்ற கொள்கையிலும் பிரதிபலிக்கப்படுகின்றது.

இறுதியாக ஒருவர்க் கொருவர் . உதவி என்ற விழுமியம் கடைசி இரண்டு கூட்டுறவுக் கொள்கைகளான கூட்டுறவுக் கல்வியிலும். கூட்டுறவு நிறுவ நிறுவனங்களுக் கிடையே கூட்டுறவு என்பதிலும் தொக்கி நிற்கின்றது. ஒத்துழைப்பின் மூலம் மக்கள் தமது தலைவிதியை நிர்ணயிக்கலாம் என்பதே இவ்விழுமியத்தின் உட்பொருளாகும்.

எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் சில குறிக்கோள்கள் இருக்கின்றன. இந்தக் குறிக்கோள்களின் மூலம் அந்நிறுவனத்தின் விழுயங்களும் நம்பிக்கைகளும் வெளிப்படையாக எடுத்துரைக்கப்படுகின்றன. வேறுவிதமாகக் கூறுவதானுல் அந்நிறுவனத்தின் தத்துவத்தினையும் வணிக நடைமுறைகளையும் இந்தக் குறிக்கோள்கள் பொதுப்படையாக வர்ணிக்கின்றன எனலாம். இக்குறிக்கோள்கள் நிறுவனத்தின் பண்பாட்டிற்கு வரம்பு கட்டுவதோடு அந்நிறுவனத்தின் திட்டமிடலும் இடம்பெற வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் குறிக்கோள்களிலே சமத்துவம், சமநீதி, ஒருவர்க் கொருவர் உதவி ஆகிய விழுமியங்கள் தெட்டத் தெளிவாக தொனிக்கின்றன. உலகிலே கூட்டுறவுச் சங்கம் ஆற்றவிருக்கும் பணியினை அவை விளம்புகின்றன.

(வளரும்)

# தையல் இயந்திரத்தை உபயோகிப்பது எப்படி?

நமது பாவிப்பிற்குரிய தையல் இயந்திரத்தை நமது சொந்தப் பாவிப்பிலேயே வைத்திருத்தல் மிக நல்லது. தினசரி பாவிப்பதாயின் ஒரு கிழமைக்கு ஒரு தடவை தையல் இயந்திரத்தில் எல்லாப் பகுதிகளையும் துடைத்து, எண்ணெய் விட்டு துப்பரவு செய்ய வேண்டும். எண்ணெய் விடும்போது ஒரு மாதத்திற்குமூன்றுடதவைகளாவது விடலாம். இப்படி விட்டு வருவதால் தையல் இயந்திரத்தின் பகுதிகள் துருப்பிடியாது பாதுகாப்பதுடன் மட்டுமின்றி, இயந்திரம் விரைவாக இயங்கக் கூடியதாகவும் இருக்கும். எண்ணெய் பாவிக்கும் போது ஒரே எண்ணெய்யையே தொடர்ந்து பாவிக்க வேண்டும். எண்ணெய் மாற்றம் செய்யப்பட்டால் இயந்திரமும். அதன் பகுதிகளும் பழுதடையக் கூடும்.

### எண்ணெய் விட்டுச் சுத்தம் செய்யும் முறை

தையல் இயந்திரத்திற்கு எண்ணெய் விட்டுச் சுத்தம் செய்ய முன்னர் மெசினின் எல்லாப் பகுதிகளையும் சுத்தமாகத் துடைத்துத் துப்பரவு செய்ய வேண்டும். இதற்கு இயந்திரத்துடன் இருக்கும் சிறிய பிறஷினுல் இலகுவாகத் துடைத்தும் துப்பரவு செய்யலாம். இவ்வாறு துடைத்தபிற்பாடு சுத்தமான ஒரு துணியினுல் துடைத்துச் சுத்தமாக்கவேண்டும். இதன் பின் எல்லாப் பகுதிகளுக்கும் சொற்ப அளவில் எண்ணெய்யை விடலாம். சில சமயங்களில் விட்ட எண்ணெய் கட்டியாக இருப்பின் மெசினைச் சுத்திதைப்பதற்கு கஷ்டமாக இருக்கும் மெசின் பகுதிகளிலே எண்ணெய் அடைத்திருக்குமானுல் பரவின் மெழுகை உருக்கி எண்ணெய்விட்ட அதே துளைகளினூடாக மெசின் பகுதிகளுக்குள் விட்டு நன்ருகச் சுத்த வேண்டும் (பரவின் மெழுகுக்குப் பதிலாக மெழுகு திரியும் பாவிக்கலாம்) எண்ணெய் விட்ட பின்னர் மெசினைச் சுத்தமான துணியினுல் துடைத்து விட்டு மெசினின் கீழ்ப்பகுதிகளுக்கெல்லாம் எண்ணெய்யை வீட்டுத் துடைத்து விட வேண்டும். எண்ணெய்யை விடும்பொழுது சட்டிலுக்கு நூல் சுத்துவதற்கு உதவியாகவிருக்கும் இறப்பர் ரோதையின் மேல் எண்ணெய் படும்படி விடக்கூடாது. எண்ணை பட்டு விட்டால் ஒட்டுப்பட்டு காணப்படும். கால் மெசினுயின் தையல் தைக்க உதவியாகவிருக்கும் சில்லு முதலிய கீழ்ப்பாகங்களுக்கும் எண்ணெயை விட வேண்டும். எல்லாப் பகுதிகளுக்கும் எண்ணெய்யை விட்ட பின்னர் தையல் ஊசியில் நூல் போடாமல் சுத்தமான வெறும் துணியை வைத்துச் சொற்ப சொற்ப நேரம் வரை தைக்கவேண்டும் இப்படித் தைப்பதால் மிகுதியாவுள்ள எண்ணெய்யாகவும் அந்துணியிலேயே எடுபட்டுவிடும் இதன் பின் எந்த விதமான துணிகளையும் வைத்துத் தைக்கலாம்.

### தையல் இயந்திரம் பழுதடையாமல் பாதுகாக்கும் முறை;

1. நூல் போடும் போது மேல், கீழ்ப் பகுதி எங்கும் சரியான முறைப்படி போடப்படல் வேண்டும்.
2. உள் பகுதிக்கு நூல் சுத்தும் வொபினில் நிறைய நூல் சுத்தக்கூடாது. எல்லா நூலும் முடிவடைந்த பின்னே மீண்டும் நூல் சுத்த வேண்டும். வொபினில் நூலை ஒரே சமமாகச் சுத்த வேண்டும்.

### தைக்கும் போது தையல் ஊசி முறியக் காரணம்.

நூல் சரியான முறைப்படி போடப்படாவிட்டால் உடனே ஊசி முறிந்துவிடும். ஊசி நுனியில் இருப்பதாலும் முறியக்கூடும். அவதிப்பட்டு நூலை இழுத்து அறுப்பதினுலும் முறிபும் மொத்தமான சீலைக்கு மெல்லிய ஊசியைப் பாவிப்பதாலும் ஊசி முறியக் கூடும்.. எனவேசீலைக்கேற்ற ஊசிகளைப் பாவித்து தைப்பதால் ஊசிகள் முறிவதைத் தடுக்கலாம் மொத்தமான சீலைகளுக்கு இலக்கம் 15, 16, 17, 18 ஆகிய இலக்கங்களுடைய ஊசிகளைப் பாவிப்பதே நல்லது. மெல்லிய சீலைகளுக்கு மெல்லிய வேலைகள் செய்வதற்கு 10, 11ம் இலக்கமுடைய ஊசிகளையே பாவிப்பதுநல்லது. தையல் ஊசி இறுக்கப் பூட்டுப்படாவிட்டால் ஊசியைத் தாங்கிக் கொண்டிருக்கும பிளவு லூசாக இருக்கும். இதனுல் ஊசி முறியவுங் கூடும்.

### தையல்கள் தளர்ந்தும் சுருங்கியும் வரக் காரணம்,

நூல் சரியான முறைப்படி போடப்படாவிட்டால் ஊசி சரியான அளவில் இராவிட்டால், தையல் அளவைக் காட்

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கு வெளிக் கல்வியும் வளர்ந்தோர் கல்வித் திட்டமும்

சி. எஸ். சுப்பிரமணியம்
வளர்ந்தோர் கல்வி அதிகாரி, யாழ்ப்பாணம்

ஐம்பது ஆண்டு காலமாக பாடசாலைக்கு வெளியே உள்ள வயது வந்தோருக்கும், இளைஞர்களுக்கும் கல்வி பயிற்றுவதே கல்வி முறையில் முக்கிய அம்சமாக விளங்கியுள்ளது. 1933 ம் ஆண்டளவில் முதலாம் சட்ட சபையின் கல்வி நிர்வாகக்குழு டொனமூர் யாப்பின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட கிராமிய பாடசாலை அதிபர்கள் பாடசாலைச் சுற்றுடலில் வாழும் கிராமிய வாசிகளுக்கு உள்ளூர் உத்தியோகத்தர் விஸ்தரிப்புச் சேவை ஊழியர் உதவியோடு சுகாதாரம், கிராமிய விஞ்ஞானம், விவசாயம் போன்ற பாடங்களைக் கற்பிக்க ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கல்வித்திட்டத்தில் எழுத்தறிவு இசை நாடகம், தேசிய விளையாட்டு போன்றவையும் சேர்க்கப்பட்டன. தலைமை ஆசிரியர்களுக்கு படி வழங்கி உபகரணங்களை அரசாங்கம் கொடுத்தது. 1933 ஆண்டில் 10 நிலையங்களில் ஆரம்பித்து 1939 ம் ஆண்டில் இது 500 நிலையங்களாக விரிவடைந்தது. இதற்குச் சமாந்தரமாக பிரதான நகர்ப்புறங்களில் இராப்பாடசாலைகள் நடத்தப்பட்டன. இவ்விராப் பாடசாலைகளில் தொழில் புரிவோரும் வீட்டு வேலையாட்களும் ஆங்கிலமும் வேறுபாடங்களும் கற்றனர். இவ்வகுப்புக்களுக்கு மாணவர் வருகை மிக நன்றாக இருந்தது.

1977 ம் ஆண்டளவில் பழைய வயதுவளர்ந்தோர் கல்வி நிலையங்களில் 20 மட்டும் மிஞ்சின. ஆனால் திட்டம் உயிராக இருந்தது அந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஒரு புதிய திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன் நோக்கம் 1933 ம் ஆண்டுதொடங்கிய பழைய திட்டத்தைப் புதிப்பித்து சீரமைப்பதாகும். ஆரம்பத்தில் தலைமையாசிரியர்களை தேர்தல் தொகுதிக்கொருவராக அவர்களது பணியோடு வளர்ந்தோர் கல்விப் பொறுப்பாளராகவும் நியமிக்கவிருந்தது. ஆனால் இத்திட்டம் தேவைகையில் நிறைவேற்றப்படவில்லை. ஆடி மாதம் 1977ம் ஆண்டு ஒரு மீளாய்வு செய்யப்பட்ட திட்டம்அறிமுகப்படுத்தப் பட்டது.

வளர்ந்தோர் கல்விஉத்தியோகத்தராக கல்விச் சேவையிலிருந்தும், ஆசிரியச் சேவையிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுதேர்தல் தொகுதிக்கொருவராக அவர்கள் இப்பணிக்கு நியமிக்கப்பட்டனர். அடிப்படையில் பழைய திட்டப்படியே நோக்கம் வயதானோருக்கு நவீன வாழ்க்கையில் ஏற்படக் கூடிய சிக்கல்களைக் சமாளிக்கக் கூடிய தன்மையை புகட்டுவதாகும். குறிப்பாக ஒருவருடைய தனிப்பட்ட சமூகப்பண்பாட்டு விருத்திக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். கிராமத்தவர்களுக்கும் நகரத்தவர்களுக்குமாக இது செய்வதே நோக்கம். முன்னைய திட்டப்படியே இதற்கும் வேண்டிய உதவியாளராக அரசாங்க உத்தியோகத்தர், வெளி உத்தியோகத்தர் மற்றும் அறிவாளிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். முதலில் நிரந்தர வளர்ந்தோர் கல்வி நிலையங்களை நிறுவி இந்தத்திட்டங்களைச் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டது. ஆனால் அது சித்தியடையவில்லை எனினும் வயது வந்தவர்களுக்கு அவர்களுடைய தேவைகளுக்கேற்ப கிராமம் கிராமமாகச் சென்று நடமாடும் கல்வித்திட்டம் ஒன்று நடத்த எடுத்த தீர்மானம் திறமையான உத்தியோகத்தர்களால் நடைமுறைப்படுத்தியபோது அவை உடனடியாக வெற்றியை அழித்தது. எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, முன்னோடியாக பாடசாலையை விட்டவர்களுக்கு பகுதி நேர தொழில் நுட்ப அறிவு கற்பிக்கும் திட்டம் பழைய தொழில் கல்வித்திட்டத்துக்குப் பதிலாக ஒழுங்கு செய்யப்பட்டது. இது இப்பொழுதுவிஸ்தரிக்கப்பட்டு இலங்கையில் ஒவ்வொரு தொகுதியிலும் பல பாடசாலைகளிலும் செயற்படுத்தப்படுகிறது. பாடசாலைக்குவெளியே வளர்ந்தோர் கல்வித்திட்டம் உத்தியோக பூர்வமாக மந்திரி சபையினால் அங்கீகரிக்கப்பட்டு தேசிய கல்வித்திட்டத்தின் ஒரு அங்கமாக்கப்பட்டுள்ளது.

ஒரு தேர்தல் தொகுதி பெரும்பாலும் ஒரு உதவி அரசாங்க அதிபருடைய நிர்வாகப் பிரிவாக இருக்கும். அரசாங்க அதிபரால் இணைக்கப்படுகின்ற சேவைகளைவிட ஏனைய அமைச்சுக்களாலும் இணைக்களங்களினாலும் நேரடியாக கட்டுப்படுத்தப்படுகின்ற சேவைகளும் இருக்கின்றன. இதே போன்று தன்னிச்சையான சங்கங்களும் பலதுறைகளிலும் சேவை புரிகின்றன. வளர்ந்தோர் கல்விச் சேவை சிறப்பாக செயலாற்றப்படும். சகல தேர்தல் தொகுதிகளிலும் அங்குள்ள வளர்ந்தோர் கல்வி அதிகாரிகள் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். இவர்கள் அங்குள்ள எல்லாச் சேவைகளையும் வழங்கலையும் ஒன்றிணைத்து மக்களுக்குப் பயன்தரக்கூடிய வகையில் மிக நுண்மையாகச் செய்து முடிக்கிறார்கள். இவர்கள் ஒரு முக்கியமான கல்வி அபிவிருத்தித்திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறார்கள்.

இப்பொழுது திட்ட அமுலாக்கல் அமைச்சு பதினொரு மாவட்டங்களில் வளர்ந்தோர் கல்வி அதிகாரி மூலம் உணவு போஷாக்குக் கல்வி பற்றிய அறிவைப் புகட்டுகிறது. இதற்கு வளர்ந்தோர்கல்வி அதிகாரிகள் இணைப்பு அதிகாரிகளாகவும், ஊக்குவிப்பாளர்களாகவும் நிகழ்ச்சிகளை ஆரம்பித்து போதிக்கும் விரிவுரையாளர்களாகவும் கடமை ஆற்றுகின்றார்கள்.

வியாபாரக் கப்பல் துறை அமைச்சு வளர்ந்தோர் கல்விச் சேவையை பயன்படுத்தி இலங்கை முழுவதிலும் நுகர்வோர் சங்கங்களை அமைத்துள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு வளர்ந்தோர் கல்வியில் ஒரு முக்கிய அம்சமாகும். வளர்ந்தோர் கல்வி அதிகாரிகளுடைய வேலைகளில் ஒரு முக்கிய பகுதி தொழில் பயிற்சி வழிகாட்டலாகும். இக்கடமையைத் திறம்பட புரிவதற்கு அவர் தொழில் இணைக்களம், தொழில் அபிவிருத்திச்சபை, தேசிய தொழிற் பயிற்சிச் சபை போன்றவற்றோடும் ஏனைய தன்னிச்சையான சங்கங்களான சர்வோதைய இயக்கத்தினோடும் இணைந்து செயலாற்றுகின்றார்.

முழுநேர பகுதிநேர தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள் பாடசாலையை விட்டு வெளியேறியவர்களுக்கு ஒழுங்கு செய்து, மேற்பார்வை செய்து, இந்த நெறிகளை எல்லோரும் விரும்பிப் பயிலச் செய்வது இவர்களுடைய உத்தியோக பூர்வமான கடமையாகும். இலங்கை முழுவதிலும் பாடசாலைக்குப் போகக் கூடிய வயதுள்ள பிள்ளைகள் எழுத்தறிவின்றி ஆங்காங்கே இருக்கின்றனர். யூனிசெவ் ஆதரவோடு பதினொரு நிலையங்கள் இதற்கென இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் திறக்கப்பட்டுள்ளன. வளர்ந்தோர் கல்வி அதிகாரிகள் தன்னிச்சா சங்க உதவியோடு இவ்வேலைகளை ஒழுங்கு செய்து உதவி அரசாங்க அதிபர், வைத்திய அதிகாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டமிடல் அதிகாரி, கிராமசேவர், பாடசாலை அதிபர் ஆகியவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்துஅக்குழுவின் பூரண ஒத்துழைப்புடன் மேற்பார்வை செய்து வருகின்றனர். ஒவ்வொரு நிலையத்துக்கும் அப்பகுதியில் உள்ள அரசாங்க பாடசாலையிற் கடமையாற்றிவரும் பயிற்றப்பட்ட ஆசிரியர், திங்கள், புதன், வெள்ளி, நாட்களில் பிற்பகல் 3 மணி தொடக்கம் பிற்பகல் 6–00 மணி வரைக்கும் பிள்ளைகளின் தேவைகளைக் கொண்டு கற்பிக்க நியமிக்கப்பட்டுள்ளனர். பதினொரு நிலையங்களிலொன்று யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டது. கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, புத்தூர் பகுதியில், மிகவும் பின்தங்கிய கிராமமாகிய வேம்பிராய் என்ற இடத்தில் 65 பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று கல்வி பயிலாத காரணத்தை அறிந்து அவர்களின் கல்வி விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு கல்வி ஊட்டப்பட்டு வருகின்றது.

இப்படியான திட்டம் நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப் பட்டபோது எல்லா அமைச்சுகளுக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டது. எல்லா அமைச்சுகளும் தங்களது மாவட்ட பகுதி அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வமாக வளர்ந்தோர் கல்விச்சேவைக்கு உதவியளிக்கவும், ஒத்துழைப்பைக் கொடுக்கவும் இணைக்கவும் அறிவிக்கப்பட்டுள்ளது. வளர்ந்தோர் தங்களையும், குடும்பங்களையும், தங்கள்வேலைத்தலங்களையும், தாங்கள் வசிக்கும் சமுதாயத்தையும், பொதுவாக நாட்டையும் பார்க்கக்கூடிய தீர்மானங்கள் எடுத்திருக்கிறார்கள். எனவே இவர்கள், சரியான தீர்மானங்களைப் போதிய அறிவோடும் சரியான விளக்கத்தோடும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்மானம் எடுக்கவேண்டியது அவசியமாகும்.

கடந்த ஐந்துவருடங்களாக இன்று வளர்ந்தோர் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றுவோர்கள் இத்துறையில் நல்ல அநுபவம் பெற்று எல்லா வயதினருக்கும் எல்லாத்துறை தொழிலில் உள்ளவர்களுக்கும் உதவியளித்து ஊக்கமளித்து அவர்களைச் சரியான தீர்மானம் எடுப்பதற்கு பயிற்சி உள்ளவர்கள் இந்த நோக்கத்தோடு ஒவ்வொருதேர்தல் தொகுதியிலும் எங்கெங்கு வளர்ந்தோர்கல்வி நடைமுறைப் படுத்தப்படுகின்றதோ அங்குசகலவிபரங்களும் அடங்கியுள்ள தகவல் கைநூல் தயாரிப்பதற்கு முயற்சியெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பலதரப்பட்ட வளர்ச்சிக்கு வளர்ந்தோர் கல்வித்திட்டம்இன்றியமையாதது. கற்றறியாதவர்கள் எழுத வாசிக்கக்கூடிய முறையில் பயிற்சி பெற்று முன்னேற முடியும். படி

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் கூட்டுறவுப் பயிற்சி

கூட்டுறவு முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு எவ்வாறு கருத்தியல் கோட்பாடுகளும், கொள்கைகளும் இன்றியமையாதனவோ அவ்வாறே திறமையும் தகுதியும் வாய்ந்த மேலாண்மை அமைப்பும் அவசியமாகும்.

கூட்டுறவுத்துறை தற்காலத்தில் விரிவடைந்தும் பல்வேறுவகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளைத் தழுவியதாகவும் வியத்தகு அளவு வளர்ச்சியுற்றுக் காணப்பட்டாலும் பணியாளர்களுக்காகவும், தொழில் ரீதியாகத் தகுதியுடையதும் நிறுவன ரீதியான ஒப்புமையுடையதுமான திட்ட அமைப்புக்களுக்காகவும் பெரிதும் அரசாங்கத்தையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது. இச்சூழ்நிலையில்தான் கூட்டுறவுக் கல்வியும் பயிற்சித் திட்டமும் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. மேலும் கூட்டுறவுத் துறைக்கு உகந்த நிறுவனங்களோடமைந்த பயிற்சித் திட்டங்களை உருவாக்கிட முறையான திட்டங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இன்றைய நாளில், நிறுவனங்களிலான பயிற்சித் திட்ட ஏற்பாடுகள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் கூட்டுறவு மேம்பாட்டுத் திட்டங்களில் ஓர் முக்கிய அங்கம் வகிக்கின்றது.

**கூட்டுறவுப் பயிற்சித் திட்டம்**

கூட்டுறவுப் பயிற்சிக் கொள்கையானது கூட்டுறவுத் திட்டத் தீர்மானங்களுக்கு இணங்க முழுதும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 6 வது திட்ட கால எதிர்நோக்கில் உள்ளபடி கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களின் முன்னுரிமையைச் சரிக்கட்டும் வகையில் செயல்முறைத் திட்டங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. கூட்டுறவுப் பயிற்சிக்கொள்கையின் முக்கிய குறிக்கோளாவது, கூட்டுறவு இயக்கத்தின் மேலாண்மை அமைப்பினை உறுதியாக்குவதும், முறைப்படுத்தப்பட்ட நடைமுறைப் பயிற்சிகளின் மூலம் கூட்டுறவுப் பணியாளர்களின் அறிவு, அனுபவம் மற்றும் செயல் திறனை மேம்படுத்துவதன் வாயிலாகக் கூட்டுறவு நிறுவனங்களில் தொழிற் பண்பமைந்த மேலாண்மை அமைப்பினை அமைத்திட உதவுவதும் ஆகும். மேலும் கிராமிய வளர்ச்சி நுகர்வோர் கூட்டுறவுகளின் மூலம் பொது மக்களுக்கு விநியோகம் நலிந்த பிரிவினர், மேம்பாடடைந்து வரும் மாநிலங்கள், மற்றும் இளநிலைப் பணியாளர்கள் ஆகிய துறைகளுக்கான செயற்பாடுகளை உறுதிப்படுத்த மிகுந்த கவனம் செலுத்தப்பட்டும் வருகிறது.

**குறிக்கோள்**

நமது நாட்டில் அனைத்துக் கூட்டுறவுப் பயிற்சி நடைமுறைகளைத் திட்டமிடுதலுக்கும் ஒருமுனைப் படுத்தலுக்கும் இந்திய தேசியக் கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கமான தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் கூட்டமைப்பு முழுப் பொறுப் பேற்றிருக்கின்றது. இதன் முக்கிய குறிக்கோளானது கூட்டுறவு நிறுவனங்களின் மேலாண்மை அமைப்பினை உறுதியாக்குதலும், பலதரப்பட்ட பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதன் மூலம் கூட்டுறவு ஊழியர்களின் அறிவின் பரப்பினையும், திறமையினையும் வளரச் செய்து கூட்டுறவு நிறுவனங்களின் மேலாண்மை அமைப்பினை, தொழிற் பண்பமைந்ததாக அமைத்திட உதவுவதும் ஆகும்.

இக்கூட்டமைப்பில் பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றார்கள்.

* இந்திய தேசியக் கூட்டுறவு ஒன்றியம்
* தேசிய கூட்டுறவு இணையம்
* மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்கள்
* மத்திய அரசு
* இந்திய ரிசர்வ் வங்கி
* இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கூட்டமைப்பு
* பல்கலைக் கழகமானியக்குழு
* வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள்
* மேலாண்மை நிறுவனங்கள்

ஆகியவற்றுடன் மாநில அரசின் கூட்டுறவுத்துறைச் செயலாளர்களும் கூட்டுறவுப் பதிவாளர்களும் இக்குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவரே இதன் பெருந்தலைவராகவும் ஒன்றியத்தின் உபதலைவர்களில் ஒருவர் இக்கூட்டமைப்பின் துணைப் பெருந்தலைவராகவும் இருப்பார். ஒன்றியத்தின் முதன்மைச் செயல் அலுவலர் இக்கூட்டமைப்பின் தலைமை இயக்குனர் உபசெயற் பெருந்தலைவராகவும் இருப்பார். முன்னர் இருந்த கூட்டுறவுப் பயிற்சிக்கான குழுவிற்குப்பதிலாக 1976ம் ஆண்டு இக்கூட்டமைப்பானது அமைக்கப்பட்டதாகும்.

**கூட்டுறவுப் பயிற்சி வடிவமைப்பு**

இக்கூட்டமைப்பின் கீழ் மூன்றடுக்குப் பயிற்சித் திட்ட வடிவமைப்பு அமுலில் உள்ளது. அவ்வமைப்புக்களாவன:—

வைகுந்த மேத்தா தேசியக்கூட்டுறவுமேலாண்மைப் பயிற்சி நிறுவனம் புனு. இது முதுநிலை மற்றும் முக்கிய அதிகாரிகளுக்கான பயிற்சி நிறுவனமாகும்.

16 கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகள் அடங்கியது. இங்கு மத்திய நிலை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

73 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களடங்கியது. இவற்றில் இளநிலைப் பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இக்கூட்டமைப்பானது உயர்நிலை மற்றும் மத்திய நிலை அலுவலர்களுக்கு உரிய செயல் திட்டங்களுக்கு நேரடிப் பொறுப்பேற்கின்றது. மேலும், இளநிலைப் பணியாளர்களுக்கு உரிய செயற் திட்டங்களை மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாகவோ அல்லது மாநில அரசுகள் மூலமாகவோ நடைமுறைப் படுத்த உரிய கல்வித் திட்டங்களையும் விதிமுறைகளையும் கொண்டு நெறிப்படுத்துகின்றது. நமது நாட்டில் இத்தகைய பயிற்சி வடிவமைப்பானது கடந்த இருபது ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகின்றது.

இக்கூட்டமைப்பின் கீழ் கல்விச் சிறப்பும் நேரடி அனுபவமும் கொண்டு நன்கமைக்கப்பட்டதும். தகுதி பெற்றதுமான பாடத்திட்ட முதன்மையுடன் கூடிய 17 பயிற்சிக் குழுக்கள் இயங்கிவருகின்றன. இத்துடன் தொழில்புரியும் மேலாண்மையாளர்களையும் நிர்வாகிகளையும் அழைத்துவந்து பயிற்சியாளர்களுக்கு நடைமுறை உலக அனுபவங்களையும் நன்கு உணர்த்திடும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

**பயிற்சி செயற்றிட்ட அணுகுமுறைகள்**

இக்கூட்டமைப்பு பயிற்சி வழிமுறைகளை வகுத்திடும் போது ஒருங்கிணைப்போடு கூடிய அணுகுமுறைகளைக் கையாளுகின்றது. இதன் படி ஆகத் தலைவர்களும் நிறுவனங்களில் பணிபுரியும் அதன் ஊழியர்களும் ஒன்றாகவே பயிற்சி பெறுகிறார்கள். இதற்கு முன்னர் இப்பயிற்சியானது முழுக்க முழுக்க நிர்வாக சம்பந்தப் பட்டதாகவே இருந்து வந்தது. ஆனால், தற்போது இப்பயிற்சி முழு அளவில் மேலாண்மை சார்ந்ததாக அமைக்கப் பட்டுள்ளது. இதன்படி கூட்டுறவுப் பணியாளர்களின் பல்வேறுபட்ட பணிகளுக்கிணங்க வேலைவாய்ப்பின் அடிப்படையில் இப் பயிற்சித் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியானது வகுப்பறை விரிவுரைகளோடு இடையிடையே வெளிவட்டார நடைமுறைப் பயிற்சிகளுடனும் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. பயிற்சி நிலையங்களில் உள்ளதாக நடைமுறைப் பயிற்சி அளிக்க வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. முந்தைய ஆண்டுகளில் தோற்றுவிக்கப் பட்ட பல்வேறு செயல் முறைத் திட்டங்களை நிபுணர் குழுவின் உதவியுடன் மதிப்பிடப்படும் கூட்டுறவாளர்களின் மாறிவரும் தேவைகளுக்குத் தக்கவாறு மாற்றியும் விரிவாக்கியும் அதன் செயல் முறைகள் அமைக்கப்படுகின்றன

**வைகுந்த மேத்தா மேலாண்மைப் பயிற்சி நிறுவனம்**

புனுவில் அமைந்துள்ள இந்நிறுவனம் இந்திய நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறுபட்ட உட்குழுக்களும் கல்வித் துறைகளும் ஒருங்கே அமைந்த உச்சநிலைக் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் கூட்டுறவு மேலாண்மைப் பட்டமேற்படிப்புடிப்ளோமா வகுப்பொன்றினை நடத்தி வருகின்றது.

இவ்வகுப்பினை ஒரு முழுக் கல்வியாண்டின் (38வாரங்கள்) அளவில் அமைந்திருத்தல் மூலம், நவீன விஞ்ஞான மேலாண்மைக் கருத்துக்களையும், முறைகளையும், யுத்திகளையும் சார்ந்த கருத்தாற்றலும் தீர்மானிக்கும் திறத்தினையும் கைவரப் பெற்ற இளம் பணியாளர்களையும் அரசு அதிகாரிகளையும் உருவாக்கவேண்டும் என்பதேயாகும். இச்செயல்முறைத் திட்டமானது இடையிடையே நிறுவனப் பயிற்சியோடு மற்றும் செயல் முறைப் பயிற்சிகளோடு கூடிய மூன்று செமஸ்டர்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. மற்றும் பல்வேறு கூட்டுறவு பிரிவுகளான வங்கியியல், பதனிடுதல், விற்பனை, நுகர்வோர் கூட்டுறவு, கூட்டுறவுச் சட்டம் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றில் தனித்துவம் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் 3 வார கால கூட்டுறவு நிர்வாக அபிவிருத்தித் திட்ட பயிற்சியானது கூட்டுறவு அமைப்பு, மேலாண்மை, நிர்வாகம், கூட்டுறவு முன்னேற்றம் மற்றும் எத்தகைய சமூக பொருளாதாரச் சூழ்நிலை கூட்டுறவுகள் பணியாற்றுகின்றன என்பன பற்றி அறியும் திறத்தினை உருவாக்குகின்றது.

இந்நிறுவனம் கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறு பிரிவினர்களுக்கு உரிய தேவையானமற்றும் கூட்டுறவுப் பணியாளர்களுக்குப் பணியாற்றுவதற்கு உதவிகரமான மேலாண்மை அடிப்படையில் அமைந்த வகுப்புக்களை நடத்துகின்றது. இங்கு நடத்தப் பெறும் கருத்தரங்குகளும் மாநாடுகளும் கொள்கை வகுப்போர் உயர்நிலை நிர்வாகிகள் மற்றும் முதன்மை அலுவலர்களுக்குத் தங்கள் நிர்வாகம் மற்றும் செயல் முறைச் சிக்கல்களைக் கலந்து பேசி விவாதிக்க மேடையமைத்துக் கொடுக்கின்றன! தற்போது இந்நிறுவனம் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்களில் பயிற்றுவிப்போருக்கும் பயிற்சியளித்திடும் பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டுள்ளது. சமீபகாலமாக இத்தகைய செயற் திட்டங்களை உலகநாடுகளின் கூட்டுறவு ஒருங்கிணைப்பு மற்றும் உலக நாடுகளின் தொழிலாளர் நிறுவனம் போன்ற அமைப்புக்களோடு இணைந்து நடத்தி வருகின்றது மேலுக் கூட்டுறவுக் கடன் மற்றும் வங்கியியல் பயிற்றுவிக்கும் கூட்டுறவு ஆசிரியர்களுக்கான கருத்தாய்வரங்கத்தினை உணவு மற்றும் விவசாய நிறுவனத்துடன் இணைந்து நடத்தத் திட்டமிட்டு வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் பல்கலைக் கழகங்களின் கூட்டுறவு ஆசிரியர்களுக்காக தங்களுடைய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் பல்கலைக்கழகங்களிலும்கல்லூரிகளிலும் கற்றுத் தரப்படும் கூட்டுறவு பற்றிய பாடங்களில் நாளது வரை நடைபெறும் விவரங்களை

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# குறள் உணர்த்தும் கூட்டுறவுப் பண்புகள்

கலாநிதி எம். கோபாலன்

உபரித்தொகையில் (நிகரஇலாபத்தில்) ஒரு குறிப்பிட்டவீதத்தைப் பகிர்வு செய்வது, குறிப்பாக அங்கத்தினர், சங்கத்தைப் பயன்படுத்திய அளவிற்கேற்பக் கொடுப்பது என்பது ஒரு முக்கிய கூட்டுறவுக் கொள்கையாகும்: நியாயப் பகிர்வு என்ற கருத்து அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் மேலானது. நிலையானது தலையாய அறம் என்பது, அமைப்புக்கள் எப்படி நியாயப் பகிர்வு—அது பற்றுக்குறைப் பொருளானாலும்—அல்லது உபரி நிதியானாலும் செய்கின்றன என்பதைப் பொறுத்தது. இக்கருத்தை,

'பகுத்துண்டு பல்லுயிர்
ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள்
எல்லாம் தலை'

என்ற குறள் விளம்புகின்றது.

மற்றும் கூட்டுறவுக் கொள்கை வழிநின்று எல்லா அங்கத்தினர்களுக்கும் பாகுபாடு இன்றி நடுவு நிலைமையில் பணியாற்றவேண்டிய பொறுப்பு, எல்லா வகைக் கூட்டுறவுகளுக்கும் உண்டு. பாகுபாடு காட்டுவது கூட்டுறவுக் கருத்துக்கு முரணானது, நல்லதன்று. ஒரு சில சூழ்நிலைகளில் அதிக ஆதாயம் அடைய வாய்ப்பிருந்தாலும் குறைபாடுடைய செயல்முறை கூடாது. நடுவுநிலை தவறக்கூடாது என்ற நல்ல கருத்துக்களை,

'நன்றே தரினும் நடுவி-
கந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்'

என்ற குறள்வழி உணர்ந்து கொளல் வேண்டும்.

உற்பத்தியாளர்களுக்கு உதந்த நன்மையளிப்பதற்காக விற்பனைக் கூட்டுறவுகளும், நுகர்வோர்களுக்குப் பயன் அளிப்பதற்காக நுகர்வோர் கூட்டுறவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விற்பனைக் கூட்டுறவுகள் இடுபொருள் விற்பனையுடன் (Input Marketing) விளைபொருள் விற்பனையையும் (Output Marketing) விவசாய அங்கத்தினர்களின் நன்மை கருதிச் சிறப்பாகச் செய்தல் வேண்டும் விவசாய விளைபொருள்களை உற்பத்தி செய்தவர்களுக்கு ஆதாயகரமான விலை கிடைக்கும் வகையில் முழுமையான ஏற்பாடுகளைச் செய்யும் கடமையும், பொறுப்பும் அச்சங்கங்களுக்குள்ளன. எனவே அச்சங்கங்களின் நிர்வாகத்தைக் கவனிப்போர்—இயக்குநர்களாக இருந்தாலும், தனி அலுவலர் அதிகாரிகளாக இருந்தாலும், அவரவர்களுக்கென்று உரிமையுடைய பொருளாக இருந்தால், அதனை நல்ல விலைக்கு விற்க எப்படி விருப்பம் இருக்குமோ, அதுபோலவே விவசாய அங்கத்தினர் விளைபொருளையும் விற்றுத் தரும் விருப்பத்தோடு உரிய ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். அதுவே சிறந்த வாணிகக் கொள்கை தழுவிய விற்பனையாக அமையும். இத்தகைய வணிகச் சிறப்பையே,

வாணிகஞ் செய்வோர்க்கு
வாணிகம் பேணிப்
பிறவுத் தமபோற் செயின்'

என்ற குறள் உணர்த்துகின்றது.

பொருட்களின் விலை விண்ணோக்கிச் சென்று கொண்டிருக்கின்ற இந்நாளில், தரமான பொருள்களை, நியாயமான விலையில், சரியான எடை மற்றும் அளவுகளில், தட்டுப்பாடு இன்றிக்கிடைக்க முறையான ஏற்பாடு செய்யும் அறமுறை சார்ந்த பண்ட விநியோகத்திற்கு நுகர்வோர் கூட்டுறவுகளின் சிறந்த பணி மிகவும் வேண்டற்பாலதாக உள்ளது. பெரும்பாலான மக்களுக்கு ஆற்றும் தலைசிறந்த பணியாக வலியுறுத்தப்படுவது நுகர்வோர் கூட்டுறவுகளின் சீரிய செயல் முறையே. இத்தகைய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செம்மையான வகையில் தடைப்படாமல் எல்லாவிடங்களிலும், அறவழியில் பணியாற்ற விழைவது மக்கள் பலரும் போற்றச் செய்வதும் வேண்டற்பாலதும் ஆகும் என்ற கருத்தைத்தான்,

'ஒல்லும் வகையான்
அறிவின் ஓவாதே
சொல்லும் வாயெல்லாஞ்
செயல்

என்ற குறள் நமக்கு உணர்த்துகின்றன.

## அங்கத்தினர் பண்பு

கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்கள்—குறிப்பாகச் சங்கங்களின் அங்கத்தினர்கள் பயன்தரக்கூடிய உற்பத்தி மற்றும் ஆக்கம் பயக்கும் கடன்களையே குறைந்த வட்டியில் தங்கள் கூட்டுறவுகளில் பெறல் வேண்டும். வீண் செலவுகளைத் தவிர்த்தல் வேண்டும். எந்தநோக்கத்திற்காகக் கடன் பெறப்பட்டதோ, அந்த நோக்கத்திற்கே நன்கு பயன்படுத்துதல் வேண்டும்; உரிய தவணையில் வாங்கிய கடனைத் திருப்பித்தரல் வேண்டும். எந்தவகைச் சங்க அங்கத்தினர்களாக இருந்தாலும், தாங்கள் சார்ந்த சங்கத்தில் விசுவாசமுள்ளவர்களாக (loyalty) இருத்தல் அவர்கள் கடமையாகும். ஒவ்வொருவகைச் சங்க அங்கத்தினர்களுக்கும் கடமை உண்டு. தங்கள் கடமை இவை என்பதை அவர்கள் அறிதல்வேண்டும் இவ்வாறு கடமை அறிந்து நடக்கும் அங்கத்தினர்களுக்கு, நல்லன எல்லாம் இயல்பான கடமைகளாகும். இக்கருத்தை

'கடன் என்ப நல்லவை எல்
லாம் கடன் அறிந்து
சான்றாண்மை மேற்கொள்
பவர்க்கு

என்ற குறட்பா அறிவிக்கின்றது.

கூட்டுறவு அங்கத்தினர்கள் அனைவருக்கும் தாங்கள் சங்க அங்கத்தினர் என்ற ஒரு நல்ல இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற நினைப்பு வருதல் வேண்டும். தங்கள் பொருளாதார நலன்களைப் பேணிக் கொள்வதற்காக பெரும் ஒரு இயக்கத்தைத் தழுவிய அவர்களிடையே 'மத, இன, மொழி, கட்சி, பால் மற்றும் பொருளாதார நிலை காரணமாக வேறுபாடு தோன்றினால் அது கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தையும், அன்றாட நடைமுறைவேலைகளையும் குறையுடையதாக்கும். வேறுபாடுகள் வேற்றுமையையே வளர்க்கும். அங்கத்தினர்கள் அனைவரும் வேறுபாடின்றிப் பொருந்தி அன்புடன் நல்லபணி என்ற [illegible] தைப் பெற்று வாழ்வது தான் பொருந்திவரும் வழி. இப்பண்பினை,

அன்புற்று அமர்ந்த வழக்
கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு

என்ற குறட்பா புலப்படுத்துகின்றது.

## அலுவலர் பண்பு

பொது உறவுகளைப் பேணிக்கொள்ளுதல் கூட்டுறவுகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு மிகவும் வேண்டற்பாலது. குறிப்பாக அங்கத்தினர்களிடையே நன்முறையில் பழகுதல் வேண்டும். சங்கத்திற்கு அவ்வப்போது வரும் அங்கத்தினர்கள் அயலார் அல்லார்; சங்கத்தின் உண்மையான உரிமையாளர்களே ஆகவே விவரம் விளக்கம் நாடிவரும் அங்கத்தினர்களிடம் குறிப்பாகக் கல்வியறிவு குறைந்தவர்களிடமும், குறைந்த பொருளாதார வசதிகளையே உடையவர்களிடமும் இன்சொல் பேசி பொறுமையாகவும் ஆத்திரப்படாமலும் பதில் சொல்லுதல் வேண்டும். இப்பண்பே அலுவலர்களுக்குச் சிறந்த பெருமை தருவதாகும்.

பணிவுடையன் இன்சொ
லன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்று பிற

என்ற குறளில் இவ்வரிய கருத்தைத் தெளிதல் கூடும்.

மேலும் அலுவலர்கள் தம்மிடம் பணியாற்றுவோரிடத்தும் நட்போடு பழகுதல் வேண்டும். அந்த நட்பைப் போல் செய்து கொள்வதற்கு அருமையானவை எவை உள? அதுபோல் தம்பணிக்கு அரிய துணையாக இருப்பவை எவை உள. என்ற கருத்தைத்தான்,

செயற்கரியயாவுள நட்பின்
அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு

என்ற குறள் வழி உணர்த்துகிறார் வள்ளுவர்.

ஓர் அலுவலருக்குத் தீய வழியில் செல்பவர்களுடன் உறவு கூடாது என்பதையும் குறள் உணர்த்துகின்றது. ஓர் அலுவலருக்கு ஊதியம் என்று சொல்லப்படுவது தவறானவர்களுடன் அறிவில்லாதவர்களுடன் செய்து கொண்ட நட்பிலிருந்து நீங்கி விடுவதாகும் என்பதையே

ஊதியம் என்பது ஒருவற்
குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்

என்று மொழிகின்றார்.

மற்றும் அலுவலர்களின் பணிப்பாங்கும், திறனும் நாளும் மேலோங்குதல் சங்கச் செயல் திறனுக்கு மிகவும்இன்றியமையாதது. பணியாற்றுபவர் தாம் பணியாற்ற வேண்டிய முறையை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். அவர் செய்து வரும் பணியின் உண்மையான தன்மையை அனுபவத்தால் ஏற்கெனவே அறிந்தவர்களிடமிருந்து தெரிந்து தெளிவு கொள்ளுதல் நல்லது. இப்பணிப்பாங்கின் பெருமையைப் பின்வரும் குறள் உணர்த்துகின்றது:

செய்வினை செய்வான்
செயல் முறைஅவ்வினை
உள்ளறிவான் உள்ளம்
கொளல்

அலுவலர்கள் தங்கள் பணி நேரத்தில் வீண் விவாதங்களில் ஈடுபடுவது அவர்களின் பணித் திறனைக் குறைப்பதுடன் முடியும் செயலையும் முடியாதபடி செய்து கெடுக்கும் ஒரு நோயாகும். எனவே வீண் பேச்சுக்களை பேசுபவர் தொடர்பை அவரிடம் சொல்லிக் கொள்ளாமல் கைவிடல் வேண்டும் என்ற பண்பை.

ஒல்லும் கருமம் உடற்று
பவர்கேண்மை
சொல்லாடார் சோரவிடல்

என்ற குறட்பா கூறுகின்றது.

## தலைவர்களின் பண்பு

சங்கத் தலைவர்களும் இயக்குநர்களும் மற்றும் நிர்வாகப் பொறுப்பில் உள்ள உயர் அதிகாரிகளும் கூட்டுறவுத் தலைமையின்கீழ் வருபவர்களாவர் தாங்கள் தலைமைப் பொறுப்பு ஏற்று நடத்தும் நிர்வாகத்தில் காலம் தாழ்த்தாத தன்மை, சங்கத்தின் வேலையை ஒட்டிய எல்லா விவரங்களையும் நன்கு தெரிந்து வைத்திருத்தல் நன்மை பயக்கும் திட்டங்களை துணிவோடு செயற்படுத்தும். திறன் முதலிய தலைமைப் பண்புகள் கூட்டுறவுத் தலைவர்களுக்கு மிக வேண்டற்பாலன. சிறந்த தலைமைத் தன்மைக்கான இக்கருத்தை,

தூங்காமை, கல்வி, துணி
வுடைமை இம் மூன்றும்
நீங்காத நிலனாள் பவர்க்கு

என்ற குறளில் உணர்த்துகின்றார்.

மற்றும், சங்கத்தின் வேலைப்பகுப்புக்களை அறி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# பொருளாதாரத்தை அமைப்பதற்கு மாற்று மாதிரிகள்

ஹாய் புளொம் குயிஸ்

பொருளாதார வாய்ப்பு அமைப்பிற்கு முன்மாதிரியாக அமைந்தது இளைஞர் திரட்டு அமைப்பு போர்ட் நிறுவனத்தின் சமூக சேவைத் திட்டங்களுமே. இளைஞர் திரட்டு அமைப்பினை 1957 ல் சமூக சீர்திருத்த வாதிகளான சில வெள்ளையர்கள் நியூயோர்க் நகரில் நிறுவினர். இந்தச் சீர்திருத்த வாதிகள் குடியேற்ற இல்ல இயக்கத்தினையும் கொலம்பிய பல்கலைக்கழக சமூக செயற்பாட்டு கல்லூரியையும் சார்ந்தது. நியூயோர்க் நகரின் மிக வறிய பகுதி ஒன்றிலேயே இந்த அமைப்பு நிறுவப்பட்டது. போர்ட் நிறுவனம் 1961 ல் சீரழிந்து வரும் நகரங்களைப் புனருத்தாரணம் செய்யும் பொருட்டு சமூக செயல் திட்டங்களுக்கு நன்கொடைகளை வழங்கியது. 1965 வரை போர்ட் நிறுவனம் இச்செயல் திட்டங்களுக்கு மொத்தமாக 120 லட்சம் டாலர்களைக் கொடுத்து உதவியிருந்தது.

இளைஞர் திரட்டு அமைப்பிற்கு 1961 ல் போர்ட் நிறுவனம், நியூயோர்க் நகரம், மன நலத்திற்கான தேசிய நிறுவனம், இளைஞர் குற்றத்திற்கான ஜனாதிபதி கென்னடியின் குழு தொழிற்திணைக்களம் ஆகியவை நிதிவழங்கின. இவ்வமைப்பின் செயற்திட்டம் 1962 ல் சம்பிரதாயபூர்வமாக தொடக்கி வைக்கப்பட்டது.

1965ம் ஆண்டு தொடக்கம் இளைஞர் திரட்டு அமைப்பு உணவுக் கொள்வனவு கழகங்கள் பலவற்றை ஆரம்பித்தது இந்த கழகங்களைத் தொடங்குவதற்கு ஆதரவு அளித்த நிறுவனங்களுள் போட்டோ றிகன் சம்மேளனமும் கறுப்பர் சம்மேளனமும் குறிப்பிடத்தக்கவை 1968ல் அயலிலுள்ள கூட்டுறவுச்சங்கங்களை இணைப்பதற்கென இளைஞர் திரட்டு அமைப்பிற்கு நன்கொடை வழங்கப்பட்டது. பெரிய நகரங்களிலே வாழும் சிறுபான்மையினரின் மத்தியில் தொடங்கப்பட்ட கூட்டுறவு இணைப்புத் திட்டங்களில் இதுவே முதலாவதாகும். எனினும் முழு மொத்தமாக நோக்குகையில் நியூயோர்க் போன்ற நகரங்களுக்கு அல்ல, கிராமப்புறங்களுக்கே கூடுதலான கூட்டுறவு உதவிகள் வழங்கப்பட்டன.

### எழுபதுகள்

1969 மே மாதம் 24 தொடக்கம் 27ந் திகதி வரை தேசிய கறுப்பர் பொருளாதார அபிவிருத்தி மகாநாடு டெட்ரொயிட்டில் (மிச்சிகின்) கூடியது இந்தமகாநாட்டில் ஆபிரிக்காவில் கூட்டுறவுச் சங்கங்களை வளர்ச்சியுறச் செய்யவேண்டும் என்ற ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1972 மார்ச் 10 தொடக்கம் 12 வரை இந்தியாவினுல் மிக முக்கியத்துவம் வாய்ந்த தேசிய கறுப்பர் அரசியல் மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாட்டில்தெரிவு செய்யப்பட்ட கறுப்புஉத்தியோகத்தர் மட்டுமின்றி கல்லூரி பேராசிரியர்களும் புத்திஜீவிகளும் சமூக சேவையில் ஈடுபட்டிருந்தவர்களும் கலந்து கொண்டனர். இந்த மகாநாட்டிலும் கூட்டுறவுச் சங்கங்களின் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சுய ஆதாரம், கூட்டுறவுப் பொருளாதார அமைப்பு உற்பத்தி விநியோகம் ஆகியவற்றின் மீது மக்கள் கட்டுப்பாடு ஆகியவற்றை வளர்க்க வல்ல பொருளாதார அமைப்பினை உருவாக்க வேண்டுமென இம்மகாநாட்டில் குறிப்பிடப்பட்டது. காணி வங்கிகளை உருவாக்குமாறும் மகாநாடு வேண்டுகோள் விடுத்தது. இந்த வங்கிகள் மூலம் கறுப்பர் தொடர்ந்தும் தமது காணிச் சொத்துடமையைப் பேணுவதுடன் கூட்டுறவு அடிப்படையில் பயிர் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, நிலவள ஆய்வு போன்றவை மேற்கொள்ளப்பட முடியும் என சுட்டிக்காட்டப்பட்டது கிராம அபிவிருத்திச் சபை ஒன்றினை நிறுவுமாறு கறுப்பர்கள் வேண்டப்பட்டனர். இச்சபை கறுப்பின பண்ணைச் சொந்தக்காரர்களுக்கு தொழில் நுட்ப உதவிகளை வழங்குவதுடன் கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் முயற்சிகளை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

(வளரும்)

(5ம் பக்கத் தொடர்ச்சி)

# இந்தி...

அறிந்து கொள்ளவும் மாதிரிக் கருத்தரங்குகளை நடத்திவருகின்றது.

### கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகள்

இவ்வகைக் கூட்டுறவு பயிற்சியில் 36 வார கால அளவில் கூட்டுறவில் கூட்டுறவில் உயர்நிலை டிப்ளமா 18 வாரகால சுருக்கப் பயிற்சியில் கூட்டுறவில் உயர்நிலை டிப்ளமா மற்றும் தனித்துவம் பெற்ற வேறு சில டிப்ளமா வகுப்புக்களும் நடத்தப் பெறுகின்றன.

தொழிலியல் கூட்டுறவில் டிப்ளம்மா வகுப்புக்கள் 9 கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன. அவை நடத்தப்படும் இடங்களாவன:—

பெங்களூர், புவனேஸ்வர் சண்டிகார், கௌஹாத்தி, இந்தூர், கல்யாணி லக்னே, சென்னை மற்றும் புனு ஆகிய இடங்களாகும்.

கூட்டுறவு வங்கியியலில் டிப்ளமா வகுப்புக்கள் 4 கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன. அவ்விடங்களாவன.

ஜெய்பூர், சென்னை நாக்பூர் மற்றும் திருவனந்தபுரம்.

நிலவள வங்கியியல் பற்றிய டிப்ளமா வகுப்புக்கள் கீழ்க்காணும் இடங்களில் நடாத்தப்படுகின்றன.

காந்திநகர், ஹைதராபாத், இந்தூர், கல்லாணி லக்னே மற்றும் திருவனந்தபுரம்.

கூட்டுறவுத் தணிக்கைக்கான டிப்ளமா வகுப்புக்கள் பின்வரும் 6 கல்லூரிகளில் நடத்தப்படுகின்றது. புவனேஸ்வர், சண்டி ஜெய்பூர், சென்னை பாட்னு மற்றும் புனு.

'நுகர்வோர் கூட்டுறவு நிர்வாகத்தில் டிப்ளமா வகுப்பானது பெங்களூர் சண்டிகார், கல்யாணி, புனு போன்ற இடங்களில் நடத்தப்படுகின்றன.

கூட்டுறவு விற்பனை பற்றிய டிப்ளமா வகுப்பு பெங்களூர். டேராடூன் இந்தூர் மற்றும் பாட்னு ஆகிய 4 கல்லூரிகளிலும் நடத்தப்படுகின்றது. புனுவிலுள்ள கல்லூரியில் கூட்டுறவு விட்டு வசதி நிர்வாகம் பற்றிய டிப்ளமா வகுப்பும், புவனேஸ்வர் கல்லூரியில் பெருமளவிலான விவசாய பலநோக்கு கூட்டுறவு சங்க நிர்வாகம் பற்றிய டிப்ளமா வகுப்பும் நடத்தப்படுகின்றன.

(வளரும்)

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

# தையல்...

டும் .ஸ்குரு இறுக்கமின்றி இருந்தால், உள் சட்டில் நூல் கவலையீனமாகச் சுற்றப்பட்டிருந்தால்,' ஊசி சற்று வளைந்து காணப்பட்டால் தையல்களும் தளர்ந்து துணி சுருங்கியும் காணப்படும்,

### தையல்கள் விட்டு விட்டுத் தைபடுவதற்குரிய காரணம்.

ஊசி சரியான முறையில் போடப்படாவிட்டால், சீலை அல்லது நூல் என்பன மொத்தமாக இருந்தால், மேல்பகுதி நூல் மொத்தமாயும், கீழ்ப்பகுதி நூல்மெல்லிதாயும் இருந்தால் தையல்கள் விட்டு விட்டு தைபடக் கூடும் சில சமயம் தையல் தடைப்படவும் மாட்டாது சட்டிலுக்குள்ள வொபின் சரியாக வைக்கப்படாவிட்டாலும் தையல் தைபட மாட்டாது.

### தைக்கும்போது சிக்குப் படுவதற்குரிய காரணம்.

நூல் சரியான முறைப்படி போடப்படாவிட்டாலும், வொபின் சரியாகப் போடப்படா விட்டாலும் சிக்குப் பிடிக்கும், உஸ் பகுதிக்குள் நூல் துண்டுகள் இருந்தாலும தையல் சிக்குப்பிடிக்கும். தையல் அளவைக் காட்டும் 'ஸ்குறு, இறுக்கமாக விருப்பதாலும் தையல் சிக்குப்பிடிக்கும்.

### தையல் இயந்திரம் பாவிக்கும் முறை'

தையல் மெசினின் மேல், கீழ்ப் பகுதிகளில் நூல் சரியான முறைப்படி போடப்பட்டிருக்க வேண்டும். உள்பக்க வொபினில் எப்பொழுதும் நூல் ஐதாகச் சுத்தப்பட்டிருக்க வேண்டும். உல் பகுதிக்கு நூல் சுற்றும் போது நூல்கள் முடிந்தபின்னே சுற்றுவது நல்லது'

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

# புதிய...

லது ஒரு மணித்தியாலம் கொண்ட படங்களை வீடியோ மூலம் தயாரிக்கலாம். இதற்கு குறைந்த செலவு தான் ஏற்படும்.

திரைப்படங்களைத் தயாரிப்பதற்கான கமருக்கள் மூலம் ஆளும் நுட்பங்களையும் எடிற்றிங் நுட்பங்களையும் இதன்மூலம் செய்ய முடியாதுஎன்றலும் திரைப்படத்திற்கு உரிய தனித்துவத்தையும் கலைஞர்களின் திறமைகளையும் மக்களுக்கு காட்டி திரைப்படத்துறையில் வளர்ந்து செல்ல இது சிறந்த முறை, இலட்சக் கணக்கில்பணத்தைச் செலவிட்டு திரைப் படத்தைத் தயாரித்து தோல்வியடைவதைவிட எமது தனித்துவ திறமைகள் புலப்படும் வகையில் வீடியோ படங்களைத் தயாரித்து அவைகளை கிராமங்கள் தோறும் மக்கள் மத்தியில் காட்டி அதன் மூலம் சிறு தொகையை வசூலித்து திரைப்படக்கலை வளர அத்திவாரமிடுவது சாலச் சிறந்த புதியவழியாகும்.

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

# பாடசாலை..

த்த வேலையற்ற வாலிபர்களும் யுவதிகளும் தங்களுடைய தேவைகளுக்கு ஏற்றவாறு பயிற்சித் தேவைகளை அடிப்படையாகக் கொண்டும், தொழிற் பயிற்சிகளைப் பெற்று தாங்களும் முயற்சியுடன் முன்வேற்றமடைந்து நாட்டின் வளர்ச்சிக்கும் உதவ முடியும்.

இச்சேவையிலீடுபடுபவர்களுக்கு போதிய பயிற்சியளிக்கப்படல் வேண்டும். கல்வித்தராதரமும், அனுபவமும் ஆற்றலும், தலைமைத்துவப் பயிற்சியும் சேவை மனப்பான்மையும் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய முறையில் கல்விமான்களால் வகுக்கப்பட்ட திட்டங்களை செயற்படுத்துவதினுல்நாட்டின் வளர்ச்சி ஒரு காலமும் குன்றுது.

வெவ்வேறு அமைச்சுக்களும், திணைக்களங்களும் ஒருங்கிணைந்து வளர்ந்தோர் கல்வித்திட்டத்தை அமுலாக்க முயற்சியெடுத்தால் பல பிரச்சினைகள் எழாது சுபீட்சமாக பொருளாதார வளர்ச்சியைப் பேணலாம். பாடசாலையில் கல்வி பயின்று தொடர்ந்து கல்வி கற்கத் தராதரமற்ற மாணவர்கள் அனேகர் வருடா வருடம் வெளியேறுகின்றனர். இவர்கள் சுய தொழில்களில் ஈடுபடவோ, தொழில் பயிற்சி பெறவோ வளர்ந்தோர் கல்வித் திட்டம் வழிவகுக்கின்றது. சேவை அடிப்படையில் இயங்கும் தன்னிச்சா சங்கங்கள் கூடிய முயற்சியெடுப்பதனுல் அவ்வப் பகுதிகளிலுள்ள வேலையற்றோருக்கு பயிற்சியளித்து அவர்கள் முன்னேற உதவ முடியும். கூட்டுறவை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் சங்கங்கள் கிராமங்களிலுள்ள மக்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, திட்டங்களை வகுத்து அவர்கள் பலதுறைகளிலும் முன்னேறுவதற்குரிய முறையில் உதவுதல் சாலவும் சிறந்ததாகும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு அச்சகம் நிறுவத் தீர்மானம்

திருக்கோணமலை மாவட்டத்தில் ஓர் அச்சகத்தை நிறுவவேண்டும் என நிலாவெளி ப. நோ. சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

1980/81 ம் ஆண்டில் சங்கம் பெற்ற இலாபத்தில் ஒரு மாத சம்பளத்தை நன்கூலியாக தமது ஊழியர்களுக்கு கொடுப்பதென இன்னொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தலைவர் திரு. வி. நடராசாவின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு ஜி. பி. அபேகீர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

குறித்த சங்கம் நிறுவிய பசளை கட்டிடத்தை கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. அபேகீர்த்தி திறந்து வைத்தார். திருக்கோணமலை ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் மாவட்ட செயலாளர் திரு. ஆ. மகேஸ்வரா மங்கல விளக்கை ஏற்றினர்.

திரு. வி. நடராசா தமது தலைமையுரையில் நிலாவெளி ப. நோ கூ. சங்கம் 1979ம் ஆண்டிற்குப் பின்பு இலாபத்தில் இயங்கி வருவதாகவும், அதன் நல்வளர்ச்சி திருக்கோணமலை மாவட்டத்தில் சிறந்த சங்கமாக அது திகழ்கின்றது. என்பதை எடுத்துக்காட்டுகின்றது. என்றும் கூறினர். சங்கத்தின் இத்தகைய வளர்ச்சிக்கு யொது முகாமையாளரும் ஏனைய பணியாளர்களும் எமக்கு சிறந்த ஒத்துழைப்பு வழங்கியமையே காரணம் என்றுமேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. ஜி. பி. அபேகீர்த்தி பேசுகையில் இந்தச் சங்கம் சிறிய சங்கமாக இருந்தபோதிலும் ஒழுங்கான திருவாகத்தின் கீழ் சிறப்பாக இலாபத்துடன் இயங்கிவருகின்றது. நுகர்ச்சிப் பொருட்களை விற்பதுடன் மாத்திரமில்லாது சிறுகைத்தொழில்களையும் இச்சங்கம் ஆரம்பித்து நடத்த வேண்டும் என்று கூறினர்.

மாவட்ட செயலாளர் திரு. ஆ. மகேஸ்வரா பேசுகையில் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி கூட்டுறவுக் கல்வியிலேயே தங்கியுள்ளது. ஆகவேமக்களுக்கு கூட்டுறவுக் கல்வி அறிவைப்புகட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் அதிக கவனம் எடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் ஓர் இயக்கத்தின் வளர்ச்சிக்கு பெண்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமாகும். எனவே இப்பகுதியிலுள்ள பெண்கள் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்து உழைத்து அதன் வளர்ச்சியின் மூலம் தமது வாழ்வை வளப்படுத்த வேண்டும் என்று கூறினர்.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. வி. நடராசா (தலைவர்) திரு பொ. இராமநாதன் (உபதலைவர்) திரு க. தம்பிஐயா, திரு. மா. முத்துலிங்கம், திரு. வி. உதயகுமார், ஜனுப் அகமத் லெவ்வை, ஜனுப் கே. மூகமட் ராசீக்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

## மகளிர் தனித்.....

கொள்கையால் கூட்டுறவு இயக்கம் தனியார்துறையினருடன் போட்டி போட்டு செயற்படவேண்டிய நிலையிலே பாதிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

மன்னர் மாவட்டசெயலாளர் திரு. பொ. சண்முகசுந்தரம் பேசுகையில் நுகர்ச்சியாளர் கல்வித் திட்டம் மன்னர் மாவட்டத்திற்கு விஸ்தரிக்கப்பட்டு கூட்டுறவு மகளிர் குழுக்களின் செயலூக்கத்திற்கு உறுதுணையாக விளங்குகின்றது என்றும் இதன்மூலம் கூட்டுறவு மகளிர் சமூக, பொருளாதார தொடர்பு முறைகளை வளர்க்கக்கூடிய தலைமைத்துவத்தைப் பெற்று வளர்ச்சியடையலாம் என்றும் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் உப தலைவரும் மன்னர் திட்டமிடல் உத்தியோகத்தருமான திரு. ரி. இராசநாயகம்பேசுகையில் கூட்டுறவு மக்களின் இயக்கம் அதை வளர்க்கும் பொறுப்பு மக்களுடையது. எனவே மக்கள் அதை விட்டு விலகிச் செல்லாது கூட்டுறவாளர்களாகச் சேர்ந்து உழைக்க வேண்டும் என்று கூறினர்

பாவனையாளர் கல்வித் திட்டப் பணிப்பாளர் செல்வி ஜயந்தா தென்னக்கோன் பேசுகையில் கூட்டுறவு மகளிர் கூட்டுறவின் மூலம் தமது பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கும். குடும்ப சுகாதாரம், சமூதாய தொடர்புகள் முதலியவற்றைப் பேணுவதற்கும் பாவனையாளர்கல்வித்திட்டம் வழிவகுக்கின்றது என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் மகளிர் மேற்படி முயற்சிகளில் ஈடுபடுவதால் கூட்டுறவு நிர்வாகத்தில் பங்குபற்றும் பொறுப்புடையவர்களாக இருக்கின்றனர் என்று கூறினர்.

பயிற்சி வகுப்பில் மன்னர் மாவட்ட கல்வி அதிபதி செல்வி ஆறுமுகம் சமுதாயத்தில் பெண்களின் பங்கு குறித்து உரையாற்றினர்.

திட்ட இணைப்பாளர் திருமதி அ. தவபாலசிங்கம் குடும்ப சுகாதாரம் பற்றி பேசினர். செயல்முறைப் பயிற்சியும் நடைபெற்றது

மன்னர் கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளர் திரு. ஞா. கேதீஸ்வரன் நன்றி கூறினர்.

(6 பக்கத் தொடர்ச்சி)

## குறள் உண.....

ந்து பல்வேறு பணிகளுக்கும் பொருத்தமானவர்களை அமர்த்தும் அரிய பொறுப்பும் தலைவர்களுக்கு உண்டு. இந்தப் பணியை இவர் சிறப்பாகச் செய்து முடிப்பார் என்று தெளிந்து அந்தப் பணியைப் பொருத்தமானவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை,

'இதனை இதனல் இவன்
முடிக்கும் என்ருய்ந்து
அதனை அவன்கண் விடல்.

என்ற குறளில் மொழிகின்ருர்.

இம் மூன்று பிரிவினரும் சங்க அன்ருட நிர்வாகத்தின் அங்கங்கள். சங்கத்திற்குக் குறைபாடு வந்தால் தமக்கு வந்ததுபோல் இவர்கள் கருதவேண்டும். ஆகவே நிர்வாகத்தில் எக்குறையும், எப்பழியும் வராமல் கவனித்துக் கொள்ளுதல் முக்கியத்துவம் வாய்ந்தது. சங்கத்திற்கு வரும் பழிக்காக நாணுகின்றவர்களாக—நாணயத்திற்கு உறைவிடமானவர்களாக நிர்வாகத்தில் ஈடுபட்டவர்கள் திகழ்தல் வேண்டும். இக் கருத்தை,

'பிறர் பழியும் தம் பழியும்
நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு

என்ற குறள் வழி அறியக் கூடும்.

சங்கத்தில் தொடர்புள்ள எவரும் எக்குற்றம் செய்யினும், அஃது அவரின் வளர்ச்சியை அழிப்பதாகும். எனவே எத்தகைய குற்றமும் செய்யாததையே எல்லோரும் நோக்கமாகக் கொண்டு காக்க வேண்டும் என்ற கருத்தை

"குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை'

என்று உணர்த்துகின்றது.

சங்க நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும் அங்கத்தினர் நலம் கருதி சங்கப் பணியைச் சோர்வு கொள்ளாமல். காலம் தாழ்த்தாமல் செய்துமுடித்தல் வேண்டும் என்ற நற் கருத்தை,

கலங்காதுகண்டவினைக்கண்
துளங்காது
தூங்கக் கடிந்து செயல்'

என்ற குறட்பா உணர்த்துகின்றது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## தையல்....

சுத்தும்போது நூலைப் பிடித்து இழுத்துச் சுத்துவது தவருன முறையாகும். அப்படிச்செய்தால் நூல் ஐதாகச் சுத்தப்படமாட்டாது, நிறையவும் சுத்தக்கூடாது. விளிம்புவரை சுத்தப்பட்டதும் நூல் சுத்துவதை நிறுத்தி விடவேண்டும்.

(1ம் பக்கத் தொடரச்சி)

## கூட்டுறவு....

இத்தகைய உன்னத பண்புகள் நிறைந்த உத்தமர் திரு. வீரகத்திப் பிள்ளையைப் பிரிந்து ஆருத்துயரில் அன்னரின் குடும்பத்தவருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியுற அஞ்சலி செய்கின்ருேம்.

கூட்டுறவு இயக்கம் என்ற தேரின் நான்கு சக்கரங்களாகத் திகழ்பவர்கள், இயக்கம் தழுவிய அங்கத்தினர்கள், தலைவர்கள், அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் ஆவர். இந் நான்கு சக்கரங்களும் நன்கு இயங்குமேயானல் கூட்டுறவு என்ற தேரின் ஓட்டம் பெருமைக் குரியதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை; கூட்டுறவு சிறக்கக் குறள் மொழியும் நற் பண்புகளை உணர்வோமாக


**காலம் பெறுமதியானது**

வீணே கழியும் ஒரு நிமிடத்தையேனும் மீட்டு உபயோகிக்க முடியாது. எனினும் இதையறிந்த பின்னும் எவ்வளவு நேரத்தை வீணக்குகிருேம்.— காந்தி

ஆதலால்

நொடிப் பொழுதில் உங்கள் ஆடைகளில் அழுக்கை அகற்றி பளிச்சிடும் வெண்மையைப் பெறுவதற்கு பாவியுங்கள்




**சுப்பமில்க்வைற் சோப்**

இது மில்க்வைற் புதிய தயாரிப்பு

ஒரு கட்டி விலை ரூபா 4-50

100 மேலுறைகளுக்கு ஒரு துவாய் இனம்

**மில்க்வைற் யாழ்ப்பாணம்**


யாழ் ப. நோ. கூ. ச. ... ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின்
யாழ் மாவட்டக் குழுவினரால் ... வீதி, யாழ்ப்பாணம். 841-83

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org